2.06.2026 O.S 17/2020 பி.வா.சா.1 ஹரிலிங்கம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதிக்கும் எனக்கும் தனிபட்ட முறையில் பகை எதுவும் கிடையாது என்றால் சரிதான். வாதியை எனக்கு தெரியாது. வாதியை எனக்கு யார் என்று தெரியாத என்பதை என் நிரூபண வாக்குமூலம் மற்றும் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புரோநோட்டில் சாட்சிகள் 1,2 க்கும் எனக்கும் தனிபட்ட முறையில் எந்த பகையும் இல்லை என்றால் சாட்சிகள் யார் என்றே எனக்கு தெரியாது. இந்த விபரத்தையும் என் எதிர்வழக்குரை, நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டை நான் வழக்கறிஞர் மூலம் நகல் எடுத்து இதுநாள் வரை பார்த்து உண்டா என்றால் இல்லை. நான் பட்டு வளர்ப்பு துறையில் பணிபுரிந்து ஒய்வு பெற்றேன் என்பதற்கான அடையாள அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. என் வீட்டின் விலாசம் கதவு எண்.12./46 ஏ. ஜோதி நகர், ஆலங்குளம் ஆகும். என் அப்பா பெயர் சுப்பிரமணிய நாடார். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் என் தகப்பனார் பெயரோ, என் வீட்டின் விலாசம் எதுவும் துலங்காது என்றால் சரிதான். தாவா புரோநோட் தேதியில் நான் பணிக்கு சென்றதற்கான வருகை பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ல் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்பதை காட்டுவதற்கு அது சம்பந்தப்பட்ட மாதிரி கையொப்பம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 ஐ வழங்கிய அதிகாரியின் பதவியில் தான் பணி ஒய்வுக்கு முன் நான் பணியாற்றினேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 வழங்கிய பதவி தான் அத்துறையின் உயர் பதவி என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1 வருகை பதிவேட்டின் கணிணி மயமாக்கப்பட்ட வருகை பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் கணிணிமயமாக்கப்படவில்லை. கணிணிமயமாக்கப்படவில்லை என்ற

விபரத்தை என் முதல்விசாரணை வாக்குமூலம், எதிருரை மற்றும் பி.வா.சா.ஆ1 ஆவணத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியிடம் பெற்ற கடனை மறைப்பதற்காக பி.வா.சா.ஆ1ஐ நானே பின்னிட்ட தேதி குறிப்பிட்டு தயார் செய்துள்ளேன் என்றால் தவறு. தாவா புரோநோட் தவறானது, வாதியை யார் என்றே தெரியாது என்று நான் சொல்லியிருக்க இது சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. வாதியிடம் பெற்றகடனை மறைப்பதற்கு வேண்டி பி.வா.சா.ஆ1 ஆவணத்தை மோசடியாக நானாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி வேண்டியவாறு இந்த வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாவா புரோநோட்டை அதனால் தான் பார்வையிடாமல் பொய்யானது என பொய்யான எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.